சுருக்கம்

போக்குவரத்துக் கழகங்கள் 2009 - 2010 ஆம் ஆண்டில் 3000 புதிய பேருந்துகளில் சிறப்பு மற்றும் சாதாரண வகை பேருந்துகளை ஒதுக்கீடு – அரசு மற்றும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

போக்குவரத்து (அ) துறை

அரசாணை (நிலை) எண்: 82 நாள்: 26–06–2009

படிக்கவும் :

(1) 2009–2010 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை.
(2) தலைவர் அலுவலக குறிப்பு, போக்குவரத்துத்துறை, சென்னை 9.

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட 2009–2010 நிதி நிலை அறிக்கையில் தமிழக அரசு நிதி உதவி மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மறுமலைப்பு திட்டத்தின் கீழ் 3500 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் இதற்காக தமிழக அரசு ரூ.250 கோடியை இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. அதன்படி தமிழக அரசின் நிதியுதவியுடன் 1400 பேருந்தும், மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் உதவியுடன் 1600 பேருந்துகளும் ஆக மொத்தம் இந்த நிதியாண்டில் 3000 பேருந்துகளை வாங்க முடிவெடுக்கப்பட்டது.

2. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வாங்கப்படும் 1600 பேருந்துகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களுக்கு பயன்படுத்தப்படும். மேற்காணும் நகரங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பேருந்துகளின் வகைகள் மற்றும் எண்ணிக்கை மேலும் இந்த பேருந்துகளை வாங்குவதற்கான செலவினத்தில் மைய அரசு மானியமாக வழங்கும் தொகை, தமிழக அரசு மானியமாக வழங்கும் தொகை, தமிழக அரசு கடனாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கும் தொகை ஆகிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பெருநகரத்தின் பெயர் | தாழ்தள குளிர்சாதன பேருந்து | தாழ்தள பேருந்து | மொத்தம் | பேருந்துகளின் மொத்த செலவினம் (கோடி) | மைய அரசின் நிதியுதவி | தமிழக அரசின் நிதியுதவி | தமிழக அரசின் கடன் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| சென்னை | 100 | 900 | 1000 | 245.41 | 85.89 (35%) | 36.81 (15%) | 122.71 (50%) |
| கோயம்புத்தூர் | — | 300 | 300 | 58.47 | 29.24 (50%) | 11.69 (20%) | 17.54 (30%) |
| மதுரை | — | 300 | 300 | 58.47 | 29.24 (50%) | 11.69 (20%) | 17.54 (30%) |
| மொத்தம் | 100 | 1500 | 1600 | 362.35 | 144.37 | 60.19 | 157.79 |

3. தமிழக அரசின் நிதி உதவி மற்றும் போக்குவரத்துக் கழக வளர்ச்சி நிதி நிறுவனத்தின் ( TDFC ) கடன் உதவி மூலம் 1400 பேருந்துகள் வாங்கப்படுகின்றது. அரசின் 7 போக்குவரத்துக் கழகங்களுக்கிடையேயான இந்த பேருந்துகளின் ஒதுக்கீடு மற்றும் அதற்கான மொத்த செலவினம் செலவினத்தில் தமிழக அரசின் நிதி உதவி மற்றும் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் ( TDFC ) கடன் உதவி ஆகிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | போக்குவரத்துக் கழக வளர்ச்சி நிதி நிறுவனத்தின் கடன் உதவி | | தமிழக அரசின் நிதி உதவி | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | பேருந்துகளின் எண்ணிக்கை | செலவினத் தொகை (கோடியில்) | பேருந்துகளின் எண்ணிக்கை | செலவினத் தொகை (கோடியில்) |
| 1 | மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை | 100 | 11.00 | – | 0.00 |
| 2 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை | – | 00.00 | 100 | 13.00 |
| 3 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | 300 | 33.00 | 25 | 2.75 |
| 4 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் | 125 | 13.75 | 25 | 2.75 |
| 5 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் | 75 | 8.25 | 125 | 13.75 |
| 6 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் | 300 | 33.00 | 25 | 2.75 |
| 7 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை | – | – | 200 | 22.00 |
| | மொத்தம் | 900 | 99.00 | 500 | 57.00 |

4. மேற்கண்ட கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து 3000 புதிய பேருந்துகளை வாங்க 2009–2010 நிதி ஆண்டில் கீழ்கண்ட பகுத்தளிப்பு முறையில் வாங்க ஆணையிடப்படுகிறது. அவை பின்வருமாறு :-

| | பேருந்துகளின் எண்ணிக்கை | தமிழக அரசின் நிதி உதவி | மத்திய அரசின் நிதி உதவி | தமிழக அரசின் நிதி மற்றும் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் |
|---|---|---|---|---|
| தமிழக அரசு செலவினம் | 1400 | 57 கோடி | – | 99 கோடி / – |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் (JNNURM) | 1600 | 60.19 கோடி | 144.37 கோடி | – / 157.79 கோடி |
| மொத்தம் | 3000 | 117.19 கோடி | 144.37 கோடி | 99 மற்றும் 157.79 கோடி |

மேற்கண்ட 3000 பேருந்துகளை வாங்குவதில் தமிழக அரசின் பங்கு ரூ.117.19 கோடியாகவும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்கு ரூ.157.79 கோடியாகவும் உள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் ரூ.157.79 கோடியை தற்பொழுது செலுத்த முடியாத நிலையில் இருப்பதால் இதனை தமிழக அரசே ஏற்க வேண்டியுள்ளது. ஆகமொத்தம் அரசுக்கு ரூ.274.98 கோடி ( 117.19 + 157.79 ) செலவினம் ஆகிறது.

5. மேற்படி செலவினத்தை கீழ்கண்டவாறு முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. அவை பின்வருமாறு :-

அ)

(1) வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொகை – ரூ.250 கோடி

(2) மொத்த செலவினம் – ரூ.274.98 கோடி

(3) உபரியாக தேவைப்படும் தொகை – ரூ.24.98 கோடி

ஆ) வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 250 கோடியில் ரூ.125 கோடியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மூலதன செலவினமாக கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

( ரூபாய் கோடியில் )

| | | |
|---|---|---|
| 1 | 1400 புதிய பேருந்துகளை வாங்குவதற்காக | 57.00 |
| 2 | 1600 புதிய பேருந்துகளை வாங்குவதற்காக | 60.19 |
| 3 | மதுரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்காக | 7.81 |
| | மொத்தம் | 125.00 |

2. மீதமுள்ள ரூ.125 கோடியை தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

உபரியாக தேவைப்படும் ரூ.24.98 கோடி அதாவது ரூ.25 கோடியை கடனாக துணை மானிய கோரிக்கையின் ( First Supplementary Estimates ) போது எடுத்துக் கொள்ளலாம். பின்னர் இதனை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

6. 2009–2010 நிதி நிலை அறிக்கையில் 3500 பேருந்துகளை வாங்குவதற்காக ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 3000 பேருந்துகள் மட்டுமே மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் வாங்க இயலும். மீதமுள்ள 500 பேருந்துகளை வாங்குவது தொடர்பான நடவடிக்கை பின்னர் மேற்கொள்ளப்படும்.

7. இந்த ஆணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.கு. எண். 79/SS(AP)/09, நாள் 03-06-2009.

(ஆளுநரின் ஆணைப்படி)

[illegible],
அரசு செயலாளர்

பெறுநர்
நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்
இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை–[illegible]
Chairman and Managing Director,
Tamil Nadu Urban Finance & Infrastructure Development Corporation Ltd.,
Chennai 35.
Ministry of Urban Development,
Government of India,
Nirman Bhavan, New Delhi 110011.

நகல்
இணை மேலாண் இயக்குநர், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்,
சென்னை–2.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
தனி அலுவலர், தலைவர் அலுவலகம், போக்குவரத்துத்துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச்செயலர், போக்குவரத்துத்துறை, சென்னை–9.
இணைச்செயலாளர் நேர்முக எழுத்தர், சென்னை 9.
போக்குவரத்து(டி) துறை, சென்னை 9.
அனைத்துப் பிரிவுகள், போக்குவரத்துத்துறை, சென்னை–9.
நிதி / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்